
MAGAZINE

1986



# GOVERNMENT COLLEGE OF EDUCATION

KOMARAPALAYAM - 638 183

FOR PRIVATE CIRCULATION ONLY

# ஆண்டு மலர்

இதழ் 31

ஏப்ரல் 1986

அரசு கல்வியியல் கல்லூரி
கொமாரபாளையம்-638 183.

# மலர்க் குழு

தலைவர் :

முதல்வர் திரு. டி. கே. இராஜகோபாலன் பி, ஏ. (ஆனர்ஸ்), எம். எட்.

ஆசிரியர் :

திருமதி. பி.ஜெயலட்சுமி, எம். ஏ.. (வரலாறு), எம். எட்.,

உறுப்பினர்கள் :

திரு. என். கோவிந்தராஜுலு, எம். ஏ., பி. லிப். எஸ்ஸி.,
திரு. ஜி. வரதமூர்த்தி, எம். ஏ., (ஆங்கிலம் & வரலாறு) எம். எட்.,
திரு. என். எஸ். சிலம்பண்ணன், எம். ஏ., பி. எட்.,

மாணவ உறுப்பினர்கள் :

திரு. எஸ். பழனிச்சாமி
திரு. பழனிவேல்



# மலர் அறிமுகம்

அன்புடையீர்,

எங்கள் கல்லூரி ஆண்டு மலரின் **31**-வது இதழை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

மாணவர்களின் சீரிய சிந்தனைகளும் உயர்ந்த கற்பனை உணர்வுகளும் அழகிய கவிதைகளாக, கட்டுரைகளாக இம்மலரில் இடம் பெற்றுள்ளன. இவர்களின் தளர் நடையில் தடுமாற்றம் இருக்கலாம். தவறி விழுதல் இருக்கலாம். ஆனால் அந்த மழலைத் தள்ளாடு நடையைக் காண்பதில் தானே இன்பம்! மாணவர்கள் நடைமுறை உலகைக் கூர்ந்து நோக்கி இலக்கிய உணர்வோடு சமூகப் பார்வையைப் பதித்து படைத்து அளித்த ஒரு சிலவற்றை உங்கள் முன் வைத்துள்ளேன். இம் மலரின் பெருமை யனைத்தும் இப்பணியில் பங்கேற்று உழைத்து இம்மலருக்கு மணம் சேர்த்த அனைவருக்கும் உரியன எனலாம்.

விரைவில் மலரை நல்ல முறையில் உருவாக்கித் தந்த கோமதி அச்சகத்தார் அவர்களுக்கு எங்கள் உளமார்ந்த நன்றி.

சிறந்த முறையில் மலரை வெளியிட உதவிய அனைவருக்கும் நன்றி கூறி, மலரின் மணத்தை நுகர உங்களை மலர்க் குழுவின் சார்பில் அன்புடன் அழைக்கின்றோம்.

பேராசிரியை **பி. ஜெயலட்சுமி**
மலராசிரியர்.

# மலரின் உள்ளே...




1 கல்லூரி ஆண்டறிக்கை *

2 காலம் ஓர் வானவில் *

3 Computer and Education *

4 அறிவியல் அமரர்கள் *

5 பேச்சிலாச் சமாதானம் *

6 விதி வசம் *

7 என் சிந்தனை மணிகள் *

8 அந்நாள் எந்நாள் *


9 The way to Him *

10 The Number of all possible chess games *




**T. K. இராசகோபாலன்**
முதல்வர்


## துறைச் செயலர்கள்



**எஸ். பழனிச்சாமி**
கல்லூரி மாணவர் தலைவர்



**கே. எம். வெங்கடாசலம்**
ஆசிரியர் மன்ற செயலர்



**பி. பிரபாகரன்**
ஆங்கிலத் துறை செயலர்

# அரசு கல்வியியல் கல்லூரி, குமாரபாளையம்

## ★ கல்லூரி ஆண்டறிக்கை 85—86 ★

---

கல்லூரி ஆண்டு விழா சிறப்பு விருந்தினர் கோவை மண்டல கல்லூரிக்கல்வி துணை இயக்குனர் உயர்திரு டாக்டர் வி. சுப்ரமணியம், எம்.ஏ., பி. எச். டி., அவர்களே! பேராசிரியப் பெருமக்களே! அலுவலக அன்பர்களே! மாணவர்களே! விருந்தினர்களே !

இககல்லூரியில் 31ம் ஆண்டு விழாவும், விளையாட்டுப் போட்டி விழாவும், அனைத்து மன்றங்களின் நிறைவு விழாவும் ஒருங்கே நிகழும் இந்நன்னாளில் உங்கள் அனைவரையும் வரவேற்று இவ்வாண்டு அறிக்கையை உங்கள் முன் வைக்கிறேன்.

## கல்லூரியின் வரலாறு :–

இக்கல்லூரி 1955ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் திரு. வி. டி. டைட்டஸ் அவர்களை முதல்வராகக் கொண்டு தொடங்கப் பெற்றது, கல்லூரிக்கென்று தனிக்கட்டிடம் இல்லாத நிலையில் தற்பொழுதுள்ள அரசு மேல்நிலைப்பள்ளியின் ஒரு பகுதியில் இயங்கி வந்தது. 1972ம் ஆண்டின் புதியதாகக் கட்டிடம் கட்டப்பெற்றபின் இப்பகுதிக்கு மாற்றப்பட்டது. 1959ம் ஆண்டில் புலவர் பயிற்சி வகுப்பும், 1974ம் ஆண்டில் எம். எட் பகுதிநேர வகுப்பும் தொடங்கப் பெற்றன. 1977ம் ஆண்டில் புலவர் பயிற்சி வகுப்பு நிறுத்தப்பட்டது. 1982ம் ஆண்டு முதல் பகுதிநேர வகுப்பாக இருந்த எம். எட் பட்டப் படிப்பு முழு நேரவகுப்பாக மாற்றப்பட்டது. இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி சிறந்த பாரம்பரியத்தை உருவாக்கிய முன்னாள் முதல்வர்களுக்கும், பெரியோர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இக்கல்லூரியில் நிகழ்ந்த மாற்றங்கள்

இக்கல்லூரி அலுவலகத்தில் குறிப்பிடத்தக்க சில மாற்றங்கள் நிகழ்ந்தன. இக்கல்லூரி அலுவலக கண்காணிப்பாளராகப் பணியாற்றிய திரு. கே. கனகராஜ், அரசு கலைக் கல்லூரி விழுப்புரம் மாற்றலாகிச் சென்று விட்டார். திரு. வி. சுப்ரமணியம் அவர்கள், இக்கல்லூரி அலுவலகக் கண்காணிப்பாளராக பொறுப்பேற்றார். கல்லூரி அலுவலகத் தட்டச்சராகப் பணியாற்றும் திருமதி. சி. தனலட்சுமி, கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக் கல்லூரி, நாமக்கலுக்கு மாற்றல் பெற்றுள்ளார். திரு. சி. கிருஷ்ணன் அலுவலகத்திற்குக் புதியதாக உருவாக்கப்பெற்ற உதவியாளர் டணிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## மாணவர் சேர்க்கை

பி.எட். வகுப்பிற்குத் விண்ணப்பித்தோர் எண்ணிக்கை 482. விண்ணப்பித்தவர்களில் 100 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் மூன்று மாணவர்கள் வேறு பணி கிடைத்து விட்டதால் கல்லூரியை விட்டு விலகிச் சென்றனர். தற்போது பயிலும் மாணவர்கள் 97 பேர்கள். தமிழ் நாட்டில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாணவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

| | | |
|---|---|---|
| சேலம் | ... | 30 |
| கோவை | ... | 3 |
| திருச்சி | ... | 12 |
| பெரியார் மாவட்டம் | ... | 17 |
| நீலகிரி | ... | 5 |
| வடஆற்காடு | ... | 1 |
| தென்ஆற்காடு | ... | 7 |
| கன்னியாகுமரி | ... | 3 |
| தர்மபுரி | ... | 18 |
| தஞ்சாவூர் | ... | 1 |

எம். எட். வகுப்பிற்கு விண்ணப்பித்தோர் 10. கல்லூரியில் தற்போது சேர்ந்து பயிலும் மாணவர்கள் 2 பேர்கள்

## அரசு உதவித் தொகையும் பயன் அடைந்த மாணவர்களும்:-

இவ்வாண்டில் இக்கல்லூரியில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் 17 பேர்களுக்கு அரசு உதவித் தொகையாக ரூபாய் 23970/-ம் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் 32 பேர்களுக்கு அரசு உதவித் தொகையாக ரூபாய் 23560/-ம் வழங்கப்பட்டுள்ளது. கல்லூரி முதல்வர் அவர்களே அனுமதி வழங்கி உதவித் தொகைகள் கிடைக்க ஏற்பாடு செய்தார். இவ்வுதவித் தொகையைக் குறித்த காலத்தில் மாணவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தார். இவ்வுதவித் தொகையைக் குறித்த காலத்தில் மாணவர்களுக்கு கிடைக்க உதவிய மாவட்ட ஆட்சியாளர், பிற்பட்டோர் , தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அலுவலர்கள் அனைவருக்கும் அனைவரின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தேர்வுகள்

1984-85ம் ஆண்டில் பல்கலைக் கழகத் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம்.

| தேர்வின் பெயர் | தேர்வு எழுதியோர் எண்ணிக்கை | வெற்றி பெற்றோர் | வெற்றி விகிதம் |
|---|---|---|---|
| 1. பி. எட் ஏப்ரல் 1985 செய்முறை | 93 | 93 | 100% |
| 2. பி. எட் ஏப்ரல் 1985 எழுத்துத் தேர்வு | 93 | 86 | 92% |
| 3. பி. எட் நவம்பர் 1985 முதல் பருவ எழுத்துத் தேர்வு | 93 | 77 | 83% |

## கற்பித்தல் பயிற்சி:-

முதல் நிலையான சிறுகக் கற்பித்தல் 12. 8. 85 முதல் 17. 8. 85. முடிய ஐந்து நாட்கள் மாணவர்களால் சீரிய முறையில் நடைபெற்றது. இரண்டாம் நிலையாக 19. 8. 85. முதல் 27. 9. 85 முடிய கீழ்க்கண்ட பள்ளிகளில் விரிநிலை கற்பித்தல் பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. அரசு மேல் நிலைப்பள்ளிகளான குமாரபாளையம், எடப்பாடி, சங்ககிரி, பள்ளிபாளையம்,

திருச்செங்கோடு, பவானி, சித்தோடு. பெருந்துறை. கவுந்தப்பாடி, அந்தியூர், ஈரோடு செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி, மகாஜன உயர்நிலைப்பள்ளி ஈரோடு, அனைத்துப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும், மாணவர்களுக்கு வழிகாட்டி உதவிய ஆசிரியர்களுக்கும், பள்ளி முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும், மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் உளமார எங்கள் வணக்கத்தையும் நன்றியையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். செய்முறைத் தேர்வுக்கு செய்முறைத் தேர்வுக்குழு, வந்தபோழ்து மாணவர்கள் கற்பித்தல் தேர்விற்குப் பள்ளி மாணவர் களை அனுப்பி வைத்து உதவி நல்கிய குமாரபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் அவர்களுக்கு எங்கள் அன்பு நிறை நன்றிதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆய்வகங்கள் :

இவ்வாண்டு ஆய்வகங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 11000/- கல்லூரிக்கு புதிய ஒலி பெருக்கிக் கருவிகள் வாங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் கழகங்களும் துணைக் கழகங்களும் :

அனைத்துக் கழகங்களுக்கும் தலைவர் முதல்வர் ஆவார்.

| கழகத்தின் பெயர் | துணைத் தலைவர் | செயலர் |
|---|---|---|
| ஆசிரியர் மன்றம் | திரு. ஜி. வரதமூர்த்தி கல்வியியல் துணைப் பேராசிரியர் | எஸ். பழனிசாமி |
| தமிழ் மன்றம் | திரு. என். எஸ். சிலம்பண்ணன் தமிழ்ப் பேராசிரியர் | பி. பழனிசாமி |
| ஆங்கில மன்றம் | திரு. ஆர். தங்கவேலு ஆங்கிலத் துணைப் பேராசிரியர் | பி. பிரகலாதன் |
| பொருளறிவியல் மன்றம் | திரு. கே. நடேசன் பொருளறிவியல் பேராசிரியர் | எம். பொன்முடி |
| உயிரியல் மன்றம் | திரு. பி. குமார சின்னையன் உயிரியல் பேராசிரியர் | கே. எஸ். கந்தசாமி |
| கணித மன்றம் | திரு. எ. செங்கோட்டையா கணிதப் பேராசிரியர் | கே. ஈஸ்வரன் |
| வரலாற்று மன்றம் | திருமதி. பி. ஜெயலட்சுமி வரலாற்றுப் பேராசிரியர் | டி. செல்வராசு |
| சமூகப் பணி மன்றம் | திரு. பி. சந்திரசேகரன் கல்வியியல் துணைப் பேராசிரியர் | கே. பி. செல்வராசு |

## மன்றங்களின் சிறப்பு நிகழ்ச்சிகள்

கல்லூரி அனைத்து மன்றங்களின் தொடக்கவிழா 6—11—85ந் தேதி கல்லூரி முதல்வர் திரு. டி. கே. இராசகோபாலன் அவர்கள் தலைமையில் புலவர் திரு. வை. நடேசன் எம். ஏ., பி. எட் தலைமையாசிரியர், சித்தோடு மேல் நிலைப் பள்ளி, சிறப்புச் சொற்பொழிவுடன் இனிதே நடை பெற்றது. 20—1—86 அன்று கல்லூரி முதல்வர் திரு டி. கே. இராசகோபாலன் அவர்கள் தலைமையில் பேராசிரியர் இரா. பாலசுப்பிரமணியன் எம். எம். எட் ஒருங்கிணைப்பாளர், அரசு கல்வியியல் கல்லூரி,

சென்னை, மக்கள் கல்வி என்னும் பொருள்பற்றி சிறப்பாக உரையாற்றினார். 10.1.86ந் தேதி துணைப் பேராசிரியர் க. வரதமூர்த்தி அவர்கள் தலைமையில் பாரதப் பிரதமரின் புதிய கல்விக் கொள்கை எனும் தலைப்பில் மாணவர்கள் கே. எஸ். கந்தசாமி, எம். செல்வகுமார், ஏ. இராசேந்திரன், டி. அப்பாஸ், எ. வி. ரமணி, ஜே. சுந்தரராசன் ஆகியோர் சொற்பொழி வாற்றினர். 16. 10. 85 அன்று உலக தினம் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. 25. 10. 85 அன்று கல்லூரி முதல்வர் தலைமையில் மாணவர்கள் சிவசாமி, முருகேசன், பெரியசாமி ஆகி யோர் ஐ. நா. தினம்பற்றி பேசினர். 10. 12. 85 அன்று மனித உரிமைகள் நாள்எனும் பொருள் பற்றி மாணவர்கள் அரசு தேவன், சந்தானம், முஸ்தபா ஆகியோர் கலந்து உரையாடினர்.

## நூலகம் :

கல்லூரி நூலகத்தில் 10368 நூல்கள் உள்ளன. இவ்வாண்டு நூலகத்திற்கு ரூ. 4260க்கு புத்த கங்கள் வாங்கப் பெற்றன. நூலகத்தில் மேற்பார்வை நூல்களும், புத்தக வங்கியும் பேராசிரியர் களும் மாணவர்களும் வேண்டும் போது படிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. நூலகத்தில் பேரா சிரியர்களும், மாணவர்களும் படிக்கும் வண்ணம் ஆங்கிலம், தமிழ் நாளிதழ்களும், கல்வித் தொடர்புடைய இதழ்களும் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

## பாடி வாழ்க்கையும் சமூக சேவையும் :

பி.எட். மாணவகளுக்குச் சமூக சேவையும் பாடி வாழ்க்கையும் கல்லூரி வளாகத்திலேயே 5. 8. 85 முதல் 9. 8. 85 முடிய இனிதே நடைபெற்றது. மாணவர் விடுதிக்கும் கல்லூரிக்கு மிடையே சாலை அமைத்தல், கல்லூரியைச் சுற்றிலும் சாலை அமைத்தல் போன்ற பணிகள் செம்மையாகச் செயல்படுத்தப்பட்டன. இவ்வாண்டு பாடி வாழ்க்கையும் சமூகப் பணியும் 5 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## உடற் கல்வித் துறையும் பொது நலக் கல்வியும் :

கல்லூரி விளையாட்டு மைதானம் மிகச் சிறியதாகவும் வசதி குறைவாக இருப்பினும் இங்கே எல்லாவித விளையாட்டுக்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவர்களுக்கு கேரம், சதுரங்கம், மேசைப்பந்து, கைப்பந்து, வலைப்பந்து, பூப்பந்து. கூடைப்பந்து போன்ற விளையாட்டுக்களுக்கு வசதிகள் உள்ளன. எங்கள் கல்லூரி மாணவர் மட்டுமின்றி அருகாமை யில் உள்ள இளைஞர்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் விளையாட்டு மைதானமாக பயன் படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக இவ்வாண்டு மாணவர்கள் மிக உற்சாகத்துடன் பங்கேற்று பயன்பெற்றனர் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## மாணவர் இல்லம் :

இவ்வாண்டு, மாணவர் இல்லம் ஜூலை திங்கள் முதல் சிறப்பாக இயங்கி வருகிறது. கல்லூரி வளாகத்திலேயே புதிய கல்லூரி விடுதி அரசு பொதுத்துறையினரால் கட்டப்பெற்று டிசம்பர் திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது. கல்லூரி தொடங்கிய காலம் முதல் விடுதி இல்லாத குறையும் இவ்வாண்டு முதல் நீங்கியது குறிப்பிடத்தக்க சிறப்புச் செய்தியாகும். கல்லூரி தொடங்கிய காலந்தொட்டு இதுவரை நகர் மத்தியில் விடுதி கொடுத்து உதவிய அப்புராயசத்திர நிர்வாகத்தினருக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். புதிய மாணவர் விடுதியில் 28 பேர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாண்டு உணவுக் கட்டணம் விலை வாசி ஏற்றத்தால் சிறிது கூடியுள்ள போதிலும் தினம் ரூ. 8.00 முதல் 9. 00க்கு மிகாமல் செயல் பட்டு வருகிறது.

## கல்லூரி கலை மலர் :

இவ்வாண்டும் வழக்கம் போல் ஆண்டு மலர் மலரவிருக்கிது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். இம் மலர் மாணவர்கள், பேராசிரியர்கள் தம் எண்ணங்களையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்துவதாகச் சிறந்த முறையில் அமைய உள்ளது.

## முன்னாள் மாணவர் மன்றம் :

இக்கல்லூரியில் முன்னாள் மாணவர் மன்றம் 1956ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருவது சிறப்பு அப்சமாகும். திரு, எம். கிருட்டிணசாமி, பி. ஏ. பி. டி., அவர்கள் தலைவராகவும். திரு. கே. குழந்தைவேலு, எம். ஏ. எம். எட். அவர்கள் செயலராகவும் பணியாற்றி வருகின்றனர். பல்வேறு போட்டிகளல் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் முன்னாள் மாணவர் மன்றம் பரிசுகளைக் கொடுத்து உதவியமைக்கு உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆசிரியர் பணியிடைக் கல்வி :

12—7—85ம் நாள் கல்லூரி முதல்வர் திரு. டி. கே. இராசகோபாலன் அவர்களும், வரலாற்றுப் பேராசிரியை திருமதி. பி. ஜெயலட்சுமி அவர்களும், உயிரியல்துறை பேராசிரியர் திரு. பி. குமார சின்னையன் அவர்களும் சேலம் சாரதா கல்லூரியில் நடைபெற்ற மக்கள் தொகை பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள். பேராசிரியர் திரு. பி. குமார சின்னையன் அவர்களும், உளவியல் துணைப் பேராசிரியர் திரு. ஜி. வரதமூர்த்தி அவர்களும் மைசூர் மண்டல கல்விக் கல்லூரியில் நடைபெற்ற ஆராய்ச்சி முறைப் பயிற்சியில் 14—11—85 முதல் 22—11—85 வரை பங்கு கொண்டனர்.

## முடிவுரை :

இவ்வாண்டில் கல்லூரி நல்ல முறையில் இயங்க அனைத்து உதவியும் நல்கி வரும் இயக்குநருக்கும், அலுவலகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரி இனிதே நடைபெற ஒத்துழைப்பும், உறுதுணையும் நல்கிய பேராசிரியர்களுக்கும் அலுவலக அன்பர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் உளங்கனிந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் கல்லூரி நலனில் ஆர்வம் கொண்டு வேண்டும் போது வேண்டிய உதவி களைப் புரிந்து வரும் உள்ளூர் பெருமக்களுக்கும் நன்றியை நவிலக் கடப்பாடுடையேன். எங்கள் அழைப்பினை ஏற்று வருகை தந்த முன்னாள் மாணவ நண்பர்களுக்கும், ஏனையோர்க்கும் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரி ஆண்டு விழாவிற்கு உவகையுடன் வருகை தந்து சிறப்புச் சொற்பொழிவுடன் பரிசுகளை வழங்க இசைவு தந்த கோவை மண்டல துணை இயக்குநர் டாக்டர் திரு. வி. சுப்பிரமணியம் அவர்களுக்கும் என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி

முதல்வர்,
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்.

# "காலம் ஓர் வானவில்"

காலம் ஓர் வானவில்!
மாயா ஜால வானவில் மறைந்தால்
சோக இருள் வருவதேன்?

முடியாத வேளையில் - கண்ணுக்குத்
தெரியாத விதியின்மேல் பாரத்தைபோடுவது "இயற்கை"!

காதல், நேற்றைய இன்பம்!
இன்றைய துன்பம்!
நாளைய சோகச் சுவடு!

கொடி தூக்குவதும், கோஷம்போடுவதும் தொண்டர்களுக்கு
எப்படி வேடிக்கையோ, அப்படியே
காதலிப்பதும் கண்ணீர் விடுவதும் காதலர்களுக்கு "வாடிக்கை"!

கோஷம் போடுகிற தொண்டன் இருக்கும்வரை
வேஷம் போடுகிற அரசியல்வாதியும் இருப்பான்

வசதி படைத்தவன் எதையும் ஒரே நொடியில் பெற்று விடுகிறான்!
வசதி இல்லாதவன் எதையும் ஒரே நொடியில் இழந்து விடுகிறான்!

தூரப் பார்வையில் அழகாக உள்ளதெல்லாம்
கிட்டப் பார்வையில் அருவருப்பாகத் தெரிவதேன்?

தேனைச் சுமக்கும் போது மலர்களுக்குச் சுமை தெரிவதில்லை;
தேனைக் கொடுக்கும் போது இமைகள் திறப்பதில்லை

நேற்றைய தேவைகள்
இன்றைய புறக்கணிப்புகள்!
இன்றைய புறக்கணிப்புகள்
நாளைய தேவைகளா?

காலம் ஓர் வானவில்
மாயா ஜால வானவில் மறைந்தால்
சோக இருள் வருவதேன்?


கி. ரங்கராசன்
தமிழ்

## துறைச் செயலர்கள்



**எம். பொன்முடி**

பொருள் அறிவியல் துறை செயலர்




**எம். பதிவாணன்**

பதிவேடுகள் செயலர்



**என். பதியழகன்**


கைக்கலைத்துறை செயலர்




**ஜே. ஈஸ்வரன்**

கணிதத்துறைச் செயலர்


# கல்லூரி ஆண்டு விழா – விளையாட்டு விழா




சிறப்பு விருந்தினரிடம் பயிற்சியாளர்
பரிசு பெறுதல்



முன்னாள் முதல்வரிடம் பயிற்சியாளர்
பரிசு பெறுதல்



சிறப்பு விருந்தினர்
டாக்டர் திரு. வி. எஸ். சுப்ரமணியம் எம்.ஏ.பி.எச்டி
கோவை மண்டல கல்லூரிக் கல்வி
துணை இயக்குநர் சிறப்புரை



கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் விளையாட்டு விழா
அறிக்கை வாசித்தல்

# "Computer and Education"

D. Abbas, M. SC., (D. C. A.)
Roll No. 1

It is well known that computer is a fast machine. It can perform difficult calculations very quickly. calculations which would take days, months or year for human being, can be done in a computer in less than a second or a minute. But one thing should be made clear right in the beginning. The computer has no magical power. It is only a tool-though a powerful one. The computer can't solve a problem by itself. A human brain can solve a problem through a computer. The computer cannot decide or act like a human brain. It can do what it is told to do in exactly the same way as it is instructed.

**Types of Computers :**

The first digital computer of the world, 'Mark I', jointly developed by Howard A. Ajken of Harvard University and Inter national Business Machines Corporation in 1944, physically, the machine measured fifty one feet in length and eight feet in height. This computer addstwo numbers in 0. 3 seconds and multiplies in 4. 5 seconds.

In 1947, theUniversity of Pennsylvania developed the model ENIAC. an all electronic computer. In this computer the addition of two numbers was achieved in 200 microseconds, and multiplication in 2,800 micro seconds. Thereafter transistorised computers were brought out in the late 1950s and early 1960s. In mid 1960s and early 1970s.' integrated-circuit computers were introduced in the market. Now a days, computer of different shapes and sizes are available in the market. On the other hand small and less costly computer, mini computers, or micro computer - are in the use with many small users. The recent development of microprocessor is of immense significance. Microprocessors are single electronic chips which contain the logical circuitry for a complete digital computer.

To day the word's largest computer is the CRAY machine. What the microelectronic experts are saying is that within the two decades we shall have the pocket size maxi-main frame.

## The Basic Characteristics of a Computer :

A computer must have the following devices:

(a) An INPUT device to take in(Read) the source data for calculation.

(b) An OUTPUT device to printout the results of the calculation.

(c) A device to process the information input according to a set of precise Instructions contained in the program. This deivice is called the central processing unit.

The central processing unit has three units namely Memory unit, control unit and Arithmetic and logic unit.

Memory unit helps to store the infotmation. Arithmetic and logic unit performs various arithmetic operations, involving the manipulation of numbers, and it compares and checks logic of various data while performing arithmetic operations. The control function is to ensure that information or data is correctly stored in memory, that the program steps are recalled from memory in the correct manner.

## Type of Languages :

The algorithm formulated and represented in a Flow chart for a program has to be coded in a language understandable by the computer for running the program. Languages Change from machine to machine. Some languages and its expansions are gives below.

| | | |
|---|---|---|
| FORTRAN | — | Formula Translator. |
| PL / 1 | — | Programming Language 1. |
| ALGOL | — | Algorithmic Language. |
| COBOL | — | Common Business Oriented Language. |
| LISP | — | List Processor. |
| BASIC | — | Beginners All purpose Symbolic Instructoin Code. |

## Role of Computer in Education :

The learning process can be enriched in many subjects because of the scale and range of information which a computer data bank can provide. Use is increasingly being made of the computer as a resource in teaching and learning at all levels of education.

Instructional material can be prepared and stored within the computer system in the form of programs which are carefully structured to teach specific lessons. A student could then sit at a teletypewriter terminal and call in the program and participate in the lesson.

The computer can also be used to manage the learning process. Programs can be designed to test for particular skills and knowledge. Computer programs canbe designed to create 'models' for experimental purposes.

Students, particularly in higher education and those studying science and technology, also benefit from being able to use the computers as a computational tool. They learn a programming language and write programs to solve some of their course work problems, treating the computer as an aid in much the same way as a slide rule or a set of mathematical tables.

The computer can relieve the teacher of some administrative duties, giving him more time to concentrate on teaching. For example, the computer can be used to assist in constructing time tables, to build up and maintain comprehensive student records.

We should not forget that the computer which is now an integral part of our everyday life, has developed in less than a lifetime. Tomorrow ? Who knows !

# அறிவியல் அமரர்கள்

கே. எம். வெங்கடாசலம்

எரிகின்ற விளக்கைக் கண்டேன் — அதில்
எடிசன் அவன் சிரிப்புக் கண்டேன்
பெருகும் ஒளி வெள்ளங் கண்டேன் — அப்
பெருமகனின் உள்ளம் கண்டேன்!
வருகின்ற இரயிலைக் கண்டேன் - ஜேம்ஸ்
வாட் அவனின் வன்மை கண்டேன்!
நீராவிச் சக்தியைக் கண்டே - நிலந்தனிலே
நிலைத்துவிட்டான் புகழ் உருவாழ்க!

தாவரமும் உயிரினமே என்றே கண்டான்
தளராத நம்பிக்கை மிகவுங் கொண்டான்;
சாகாத புகழினையே சார்ந்து வென்றான்
சகதீச சந்திரபோஸ் அறிஞனுமே!
தன் பெயரால் விளைவொன்றை வெற்றி கொண்டான்
வெங்கதிரோன் வெண்ணொளியில் நிலமொன்றை
விண்ணகத்தில் வெள்ளமாய்ப் பாய்ந்ததென்றே
விளங்கவைத்தான் இராமன் எனும் அறிஞனுமே!

நீரதனை நீள் நாட்கள் அழுத்தினாலும்
நிறைதனிலே குறையாது என்றே சொல்லி
பாரினிலே புகழ் கொண்டான் பாஸ்கலுமே
பாட்டினிலே நான் வடித்தேன் அதையும் இங்கே
சூரியனின் ஒளி வண்ணம் ஏழு என்றே
சூடிக் கொண்டான் புகழ் மாலை நியூட்டனுமே
ஏறி நின்றான் புகழ் என்ற ஏணி — தன்னில்
எந்தலவன் எழிலுருவை வணங்குகின்றேன்!

# பேச்சிலாச் சமாதானம்?

கி. குமாரசாமி எம். ஏ.

நாக்குகளின்
சாம்ராச்சியத்தில்
ஒரு சட்டம்
கொண்டு
வரப்படுகிறது!

★

ஜெனீவாவும்
ஐ. நா. சபையும்
புகழ்பெற
ஆரம்பித்து
விட்டன!

★

அங்கே,
பொறாமையும்
உட்பகையும்
கைகுலுக்கித்
தங்கள்
சிநேகத்தை
உறுதிப்படுத்திக்
கொள்கின்றன!

★

ஓ மகாத்மாவே!
தங்களைப் போல்
ஓர் ஆத்மா
இப்பொழுதிருந்தால்
இந்நாடகங்களைக்
கண்டு
உண்ணாவிரதமிருந்து
உயிர் விட்டிருப்பார்!
இந்நாடக
சென்ங்களில்
ஒரு சமாதானப்
புதுயுகமே
உருவெடுத்திருக்கும்!

★

நாடகம் முடிந்ததும்
நடிகர்களின்
அடுத்த நிகழ்ச்சி
அணுகுண்டு
சோதனையில்
கலந்து
கொள்வதாயிருக்கும்!

★

இதோ,
நாக்குகளின்
சாம்ராச்சியத்தில்
ஒரு நாடகம்
காட்டப்படுகிறது!

★

இப்பொழுதெல்லாம்
வீதியிலே
செல்பவனை
வீழ்த்துவதென்பது
விளையாட்டாகி
விட்டது!

"உலகச் சமாதானம்"
என்பதெல்லாம்
அரசியல்
வாதிகளுக்கே
உரிய
அலங்கார வார்த்தைகள்
ஆகி விட்டன!

★

வார்த்தைகளின்
கவர்ச்சிகளுக்கு
முன்
வாய்மை
வலுவிழந்து
விடுகிறது!

நிஜங்களைக்
காட்டிலும்
நிழல்களே
பெருமை
பெறுகின்றன!

உலகச்
சந்தையிலே
போலிகள்
மட்டுமே
போணியாவதால்
உண்மை
உணர்வுகள்
தடுமாறுகின்றன!

கணவன்—மனைவி
கூட
பேச்சு வார்த்தையின்
அடிப்படையில்
தான்
வாழ்க்கை
நடத்த
வேண்டியிருக்கிறது

போதை மாத்திரை
கொடுத்து
நோயாளியை
உறங்கச் செய்யும்
தந்திரம் மட்டுமே
பலித்துக்
கொண்டிருக்கிறது!

★

நவக் கிரகங்கள்
கை குலுக்கிக்
கொண்டால்
உலகம்
ஒற்றுமையாகி
விடாது!
கூடிப்பேசி
கையொப்பமிட்டு
விட்டால்
பேதங்கள்
போய் விடாது!

அமரத்துவம்
அடைந்துவிட்ட
அன்பும்
அகிம்சையும்
பேச்சிலல்ல
சமாதானம்,
உயிர் மூச்சில்
எனக் கதறுகின்றன!

★

ஒரு வேளை
இக்கதறல்
உலகத்தை
மயானமாக்கிய
பின்பு
அவர்களின்
காதுகளுக்குக்
கேட்கலாம்!

# விதிவசம்

சு. செல்வராசு
வரலாறு & தமிழ்

மாதவியைக் காதலித்து மதுரையினில் உயிர்துறந்த
கோவலனின் வாழ்க்கை யெலாம் விதிவசம்—அவன்
கொம்பனையாம் கண்ணகியாள் கோமன்னன் பாண்டியனின்
கோனாட்சி அழித்த தெல்லாம் விதிவசம்!

கானகத்தின் வாழ்க்கையிலே மான்துறத்தி மனையிழந்த
கல்யாண ராமன் கதை விதிவசம்
கற்பரசி சானகியாள் இராவணனின் இலங்கையிலே
சிறைவாசம் புரிந்த தெல்லாம் விதிவசம்

ஆறுபடை வீடுடைய ஆண்டவனார் ஆறுமுகன்
ஆண்டியாக மாறியதும் விதி வசம்!
பகுத்தறிவுத் தத்துவத்தைப் பாரோர்க்குப் பயிற்றுவித்த
ஈ. வெ. ரா. மறைந்த கதை விதிவசம்!

தின்பதற்கு உணவின்றித் திண்டாடும் ஏழைகளின்
அன்றாட வாழ்க்கை யெலாம் விதிவசம்
கொண்டவனைத் தானிழந்த கொடிமலராம் கைம்பெண்கள்
கோலமின்றி வாடுவதும் விதி வசம்!

மணிபதித்த மண்டபத்தில் மருத்துவனை நாடுகின்ற
மாணிடத்தார் அழிவதெலாம் விதி விதிவசம்!
மரத்தடியில் சிறுகடையில் பள்ளிகொண்ட ஏழைமகன்
படுத்துறங்கி விழிப்பதுவும் விதி வசம்!

# என் சிந்தனை மணிகள்

வி. சிவசாமி, எம். ஏ.,
வ. எண். 29

1 காலங்கள் இறைவன்பாடும் இராகங்கள். அவை வீணடிக்கப் பட்டால் மீண்டும் கேட்க முடியாதே!

2 சிறியவர்கள் எப்போதும் பெரியவர்களாக நினைக்கவேண்டும். பெரியவர்கள் ஒருபோதும் சிறியவர்களாக நினைக்கக் கூடாது

3 உனக்கு எப்போதாவது மலர்மாலை விழுந்தால் அதை எண்ணி மகிழ்ச்சி கொள்ளாதே. அதன் பின்னணியில் என்ன மறைந்து வரும் என்பதையும் எண்ணிப்பார்!

4 குற்றமில்லா மனத்தோடு நீ உண்மையாகப் பேசுவதையும், கேட்பவர் சந்தேகப்பட்டால் அவர்களிடம் எதுவும் கூறாமல் இருப்பது நல்லது.

5 பட்டம் மேல் நோக்கிப் பறக்கிறது என எண்ணாதே, விடாதே! அதன் பிடி கீழே உள்ளதை மறந்து விடாதே.

6 ஆற்றைக் கடந்து விட்டோம். இனிக் கடலைத் தாண்டி விட லாம் என எண்ணுபவர்கள் அறிவாளிகளா?

7 உன்னை இகழ்பவனை ஒருநாளும் வெறுத்து ஒதுக்காதே! காற்று எப்போதும் ஒ ரே திசையில் அடிக்காது. ஒரு நாள் அதன் திசையும், போக்கும் நிச்சயம் மாறும். உன்னை இகழ் பவனும் ஒருநாள் புகழும் வண்ணம் உன் செயல்களை ஒழுங்கு செய்துகொள்!

8 கல்லூரி என்பது விளை நிலத்துக்குச் சமம். இதில் கனிதரும் மரமும் வளரும்; கள்ளிச் செடியும் வளர வாய்ப்புள்ளது என்ப தை மறந்து விடாதீர்கள்!


9 தாமரையில் தேன் இருப்பது தவளைக்குத் தெரியுமா? எங்கி ருந்தோ வரும் தேனீக்கள் அவற்றைக் கண்டு சுவைக்கின்றன! தலைவனாக விரும்பாதே. தலைவனைத் தொண்டனைப் போல உழைக்க வைக்கும் வழியைப் பார்.

கண்ணிருந்தும் குருடனா ய், காதிருந்தும் செவிடனாய், வாயி ருந்தும் ஊமையாய் நடமாடுகின்ற பல பிணங்களுடன் நாமும் வாழ்கிறோம்.

பொன்னின் விலை ஏறினாலும் பெண்ணின் மதிப்பு குறையாது. பெண்ணிற்கு அடக்கம் தேவை. ஆணவம் கூடாது; அது அவளை அழித்து விடும்.

உண்மை பொருளாதார பட்ஜெட்டை வெளியிடுபவள் மனைவியே.

நீ விரும்புபவளை விட உன்னை விரும்புபளே மேல். என்பதை மறந்துவிடாதே நண்பா!



# அந்நாள் எந்நாள்?

P. திருஞானம்
எம். எட். மாணவர்

நிலவே!

நீ தேய்ந்தால் தேய்பிறை
நீ வளர்ந்தால் வளர்பிறை
நீ நிறைவடைந்தால் நிறைமதி
நீ மறைந்துபோனால் அமாவாசை!

மனிதரே!

நீங்கள் வளர்ந்தால் இளைஞர்!
நீங்கள் தேய்ந்தால் கிழவர்!
நீங்கள் பண்பட்டால் முழுமனிதர்!
நீங்கள் உதிர்ந்துபோனால் நல்லமரர்!

நிலவே!

நீ தேயினும், வளரினும் வருவாய்;
இப்பூவுலகிற்கு மீண்டும் மீண்டும்!

மனிதரே!

நீங்கள் தேயின் வளர முடியாது;
இந்தப்பூவுலகிற்குப் பூதவுடலுடன்வர மாட்டீர்!

நிலவே!

உன்னைப் போல் எங்களையும்
மாற்றுவாயா? மாற்றிடின்
சொல்லிடுவோம்: நன்றி நன்றி

நிலவும் மனிதரும் ஒன்றானால்
நிலவுலகம் நிறை வெய்தும்
அந்நாள் எந்நாள்?

# THE WAY TO HIM

Kumarswamy
Roll No : 92
Class : English & English
Govt. College of Education,
Komarapalayam

Men on earth, are moved like toys;
In the world of God, we all are boys,
Have faith and kind, that leads us well;
Hate and pride, are agents of hell.

Let us endure more, that is our duty,
Sweet is the world, where all are beauty,
Simple is neighbour to the temple of God,
As Himself does All, in plainly ways.
The place of God is dark to all,
His light only Saves, all from the doom,
Then let us light the world, coming from dark.

Colour is His art;
Fight with Him, not with colours.
He hides before us, the best is here;
Let us begin, our find out now
After the life - through struggle,
We shall be There, where Repture lies.

# The Number of all possible Chess Games

K. ESWARAN-33
Govt. College of Edu.

Let us make an approximate calculation of the total number of different chess games that can ever be played on a chess board. An exact calculation is quite beyond us, but we will acquire the reader with a very rough estimate of the total number of possible chess games The Belgian mathematician M. Kraichik makes the following calculation in his book entitled

The Mathematics of Games and Mathematical Diversions. "

" In the first move, white has a choice of 20 moves (16 moves for eight pawns, each of which can move one or two squares and two moves each of the two knights). For each move of white, black can respond with one of the same 20 moves. Combining each move of white with each move of black, we have 20.20—400 different games after the first move of each side.

" After the first move, the number of possible new moves increases. For example, if white made the first move **P-K4**, then it has a choice of 29 moves the next time. The number of possible moves continues to increase. For instance the queen alone, standing on Q5 has a choice of 27 moves (on the assumption that all squares that it can move to are vacant). To simplify matters, let us assume the following average numbers !

20 possible moves for both sides in the first five moves; 30 possible moves for both sides in all subsequent moves. "Also, we take the average number of moves in a single game to be 40. Then we get the following expression for the number of possible games :

$(20.\ 20)^5 \cdot (30.\ 30)^{35}$".

To get an approximate idea of this figure, let us make a few simplifying transformations

$$(20.20)^5 \cdot (30.30)^{35} = 20^{10}.\ 30^{70}. = 2^{10}.\ 3.^{70}\ 10^{80}.$$

Replace $2^{10}$ by the approximation 1000, or $10^3$, and express $3^{70}$ as

$$3^{70} = 3^{68}.\ 3^2 = 10\ (3^4)^{17} = 10.80^{17} = 10.8^{17} \cdot 10^{17}$$

$$= 2^{51} \cdot 10^{18}$$

$$= 2\ (2^{10})^5 \cdot 10^{18}$$

$$= 2.\ 10^{15} \cdot 10^{18} = 2 \cdot 10^{33}.$$

And so we obtain

$$(20 \cdot 20)^5. \quad (30 \cdot 30)^{35} = 10^3 \cdot 2 \cdot 10^{33} \cdot 10^{80} = 2 \cdot 10^{116}$$

This number leaves far behind the legendancy number of grains of wheat asked as payment for the invention of chess (that number was a mere $2^{64}-1 = 18 \cdot 10^{18}$). If the whole population of the world played chess round the clock making one move every second then it would take no less than $10^{100}$ centuries to exhaust all the games in this marathon of chess!

Thanks to

**M I R PUBLISHERS**

MOSCOW

****